# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR
# DEPOSITION OF WITNESS

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC.301/2022 | Village | : | |
| Prosecution witness | : | PW-9 | Taluk | : | |
| Name | : | **-கார்த்திகேயன்** | Occupation | : | |
| Husband Name | : | **ராஜேந்திரன்** | Age | : | 37 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 20.06.2025**

## All Accused present.

**அரசு தரப்பில் முதல் விசாரணை:**

நான் மேலகபிஸ்தலம், அரிசிகார தெருவில் வசித்து வருகிறேன், நான் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். 22.04.2022 அன்று நானும் மணிகண்டனும் கருப்பூர் பாஸ்டாண்ட் அருகே நின்ற பேசி கொண்டிருந்தபோது ஆஜர் 2ஆம் எதிரி போலிஸார் விசாரித்து கொண்டிருந்தார்கள், அவர்களிடம் ஆஜர் 2ஆம் எதிரி வாக்குமூலம் கொடுத்தார், அப்போது மதியம் சுமார் 3 மணி இருக்கும். போலிஸார் அவர் சொல்ல எழுதி பதிவு செய்து கொண்டார்கள். அவ்வாறு பதிவு செய்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எங்களிடமும் கையெழுத்து வாங்கினார்கள். 2ஆம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் மட்டும் **அ.த.சா.ஆ.4**. அதன்பின்பு ஆஜர் 2ஆம் எதிரி போலிஸாரை அவரது வீட்டிற்கு அழைத்து சென்று இரத்தகரையுடன் இருந்த கைலியை சுமார் 4 1/2 மணியளவில் எடுத்து ஆஜர் செய்தார். என்னிடம் காட்டப்படும் கைலிதான் அது. அந்த கைலி **சா.பொ.4**. அந்த கைலியை கைபற்ற போலிஸார் எழுதிய ஆவணத்தில் நான் சாட்சியாக இருந்து கையொப்பமிட்டேன். அந்த மகசரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். அந்த கைபற்றுதல் மகசர் **அ.த.சா.ஆ.5**. போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

பட்டுகுடி சந்திரசேகன் என்பவரை தெரியும். கபிஸ்தலத்திற்கும், பட்டுகுடிக்கும் இடையே சுமார் 8 கி.மீட்டர் தொலைவு இருக்கும். கைலியை கைபற்ற தயாரித்த மகசர் எழுதப்பட்டிருந்தது. அந்த ஆவணத்தில் எதிரி கையொப்பமிட்டாரா என்று தெரியாது. என்னிடம் காட்டப்படும் கைபற்றுதல் மகசர் கணினி தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலமும் கணினி தட்டச்சு செய்யப்பட்ட ஆவணம்தான். நான் எதுவும் காவல்நிலையத்திற்கு செல்லவில்லை. 2ஆம் எதிரியின் வீடு மாடி வீடா, ஓட்டு வீடா, கீத்து வீடா என்றால் எனக்கு தெரியாது நான் வெளியில் தான் நின்றுகொண்டிருந்தேன். நான் முதல்விசாரணையில் சொல்வதுபோல் எந்த விஷயமும் நடக்கவில்லை என்றும், அ.சா.1க்கு வேண்டியவர் என்பதால் பின்பு போலிஸாரால் தயாரித்த ஆவணத்தில் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு தற்போது உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- V.S.குமரேசன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.